Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, SEPTEMBER 23, 2022

வெள்ளிக்கிழமை, 23 செப்டெம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 106 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## டிசெம்பர் வரை எரிவாயு விநியோகம் இல்லை




உள்ளூர் சந்தைகளுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை புதிய எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படமாட்டாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. மக்கள் எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்துவதன் காரணமாக, நாளாந்த எரிவாயு தேவை சற்று குறைவடைந்துள்ள நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஐ.எம்.எப் நிறைவேற்று சபையின் அங்கிகாரம் கிடைக்கவில்லை

### அதுவரை உடன்படிக்கையை பகிரங்கப்படுத்த முடியாது என்கிறார் ஜனாதிபதி



சர்வதேச நாணய நிதியத்திற்கும், இலங்கை அதிகாரிகளுக்கும் இடையிலான ஊழியர் மட்ட உடன்பாடு எட்டப்பட்டாலும், அதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் .அதன் பின்னரே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை பகிரங்கப்படுத்த முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (22) பாராளுமன்றத்தில் அறிவித்தார். கடந்த பாராளுமன்ற அமர்வுகளின்போது சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட உடன்பாடுகளை பகிரங்கப்படுத்த வேண்டுமெனவும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டுமெனவும் எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக வலையுறுத்தியிருந்த நிலையில், நேற்று (22) இது தொடர்பில் பதிலளிக்கையிலேயே சபாநாயகர் இதனை அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முன்னுரிமை

இலங்கையில் அனைத்து சமூகங்களினதும் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்கவும், அதற்கான சமூக கட்டமைப்பை உருவாக்கவும், நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். பாகுபாடின்றி சிறுபான்மை மக்கள் அரச நிருவாக துறைகளில் இணைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 77வது அமர்வுகள் நியுயோக்கில் இடம்பெற்று வருகின்ற நிலையில், சிறுபான்மையினத்தவர் உரிமை குறித்த




உயர் மட்ட கூட்டத்தில் உரையாற்றும் போதே வெளிவிவகார அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P2

முடிந்தால் இந்தியாவுடன் பேசி

## ஒரு விமானத்தையாவது கொண்டுவாருங்கள்

### கூட்டமைப்பிற்கு அமைச்சர் நிமல் கோரிக்கை



முடிந்தால் இந்தியாவுடன் பேசி பலாலி விமான நிலையத்திற்கு ஒரு விமானத்தை யாவது கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## பாலின பாகுபாட்டுக்கு யாருக்கும் உரிமையில்லை



பாலுறவு மற்றும் ஆண், பெண் பால் நிலை பற்றிய நோக்கு தனிப்பட்ட ஒருவரின் கருத்தே தவிர பாலுறவு மற்றும் பால் நிலையை வைத்து அவர்களை பிரித்து நோக்குவதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்று ஐக்கிய மக்கள் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




ஐ.எம்.எஃப் ஒப்பந்த விவகாரம்

## வெளி கடனாளிகளுக்கு விளக்குகிறது இலங்கை

பொருளாதார மீட்சிக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் அடுத்த படிகள் தொடர்பில், அனைத்து வெளி கடன வழங்குநர்களுக்கு இலங்கை அரசாங்கம் இன்று (23) விளக்கமளிக்கவுள்ளது. நியூயோர்க் நேரப்படி இன்று (23) காலை 8 மணிக்கு கடன் மறுசீரமைப்புத் திட்டம் குறித்து தெளிவுபடுத்தப்படும் என்று அமெரிக்காவின் புளூம்பேர் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## விசேட புத்தகக் கண்காட்சிக்கு ஏற்பாடு



இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள அரிய மற்றும் வரலாற்று மதிப்புமிக்க புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கிய விசேட புத்தகக் கண்காட்சியொன்றை இலங்கையின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்த ஏற்பாடு செய்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சீனாவுக்கு இல்மனைட் ஏற்றுமதி



30 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தடவையாக திருகோணமலை துறைமுகத்தில் இருந்து வெளிநாடுகளுக்கான கணியவள ஏற்றுமதியை மேற்கொண்டுள்ளதாக இலங்கை துறைமுக அதிகாரசபை அறிவித்துள்ளது. நேற்றைய தினம் (22) திருகோணமலை துறைமுகத்தில் இருந்து இல்மனைட் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த முதல் ஏற்றுமதி கப்பலில் புல்மோட்டை கனிய மணல் லிமிடெட் நிறுவனத்துக்குச் சொந்தமான கனிய மணல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. குறித்த கனிய மணலை சீனாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளதாக இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சோளத்தில் மிகை பூஞ்சை

## கொள்கலன்களை திருப்பி அனுப்பியது திரிபோஷ




போஷாக்கு உணவான திரிபோஷ உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட சோளம் அடங்கிய கொள்கலன்களில் அஃப்ளடொக்சின் எனப்படும் பூஞ்சை மிகையாக காணப்பட்ட காரணத்தினால், 13 கொள்கலன்களைத் திருப்பி அனுப்பியுள்ளதாக இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் அதிகாரியொருவர், நேற்று (22) தெரிவித்தார். கடந்த ஒரு மாதத்தில் தனியார் இறக்குமதியாளர்களின் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட 260 மெற்றிக் தொன் சோளத்தில் குறித்த பூஞ்சை இருப்பது கண்டறியப்பட்டவுடன் அவை திருப்பி அனுப்பப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

60 வயது ஓய்வு தீர்மானத்தால்

## நோயாளர்களுக்கு உயிர் ஆபத்து

60 வயதைத் தாண்டிய அனைத்து அரச ஊழியர்களும் கட்டாயம் ஓய்வு பெறவேண்டும் என்ற அரசின் தீர்மானத்தால், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தத் தீர்மானத்தின் காரணமாக, ஏற்கெனவே திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சைகளை கைவிட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அது நோயாளிகளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 65இல் இருந்து 60ஆகக் குறைப்பதற்கு, 2022 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டது.

தொடர்ச்சி P2

## அறிகுறி தென்பட்டால் அனுப்ப வேண்டாம்

### பெற்றோருக்கு ஆலோசனை

சிறுவர்களிடையே பரவிவரும் தொற்று குறித்த அறிகுறிகளை அவதானித்தால், அவர்களை வெளி இடங்களுக்கு அனுப்பாமல் வீட்டிலேயே வைத்திருக்குமாறு, சுகாதார வல்லுநர்களால் பெற்றோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

காய்ச்சலுடன் அல்லது காய்ச்சல் இன்றி சிறார்களின் கை, கால் மற்றும் வாயைச் சுற்றி சிவப்பு நிறத்தில் தளும்புகள் அல்லது வெள்ளை நிற கொப்புளங்கள் ஏற்படுவதாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஐந்து மாதங்களுக்கு

## வடக்கு ரயில்சேவை நிறுத்தப்படும்



இந்தியாவின் நிதி உதவித்திட்டத்தின் கீழ் வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு பணிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் ஐந்து மாதங்களுக்கு வடக்கிற்கான ரயில் சேவைகள் நிறுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தொல்லியல் திணைக்களம்

## தமிழர்களுக்கு எதிரான இனவாத திணைக்களம்



தொல்லியல் திணைக்களம் தமிழ் மக்களுக்கு எதிராக மிக மோசமான இனவாத திணைக்களமாக, தொடர்ச்சியாக செயற்பட்டுக்கொண்டிருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான எம்.ஏ .சுமந்திரன் பாராளுமன்றத்தில் நேற்று (22) குற்றம் சாட்டினார்.குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறியவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்து நீதியை காக்க முற்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நெருக்கடியில் இருந்து விடுபட ஒத்துழைப்பு வழங்குவோம்



பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டுள்ள இலங்கைக்கு, நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கான சகல விதமான ஒத்துழைப்புகளை வழங்குவதுடன் அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலர் விக்டோரியா நுலாண்ட் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 77வது அமர்வுகள் நியுயோக்கில் இடம்பெற்று வருகின்ற நிலையில், அதில் கலந்துகொள்ளும் இலங்கைக் குழுவுடன் சென்றுள்ள வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலர் விக்டோரியா நுலாண்ட்டை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

தொடர்ச்சி P2

# ஐ.எம்.எப் நிறைவேற்று சபையின் அங்கிகாரம் கிடைக்கவில்லை

அவர் மேலும் கூறுகையில், இந்த விடயம் தொடர்பில் ஜனதிபதியுடன் கலந்துரையாடினேன். அப்போது அவர், சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டாலும், அதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். அதற்கு முன்னர் ஏனைய கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும் . அவர்களின் அறிக்கைகளும் சேர்க்கப்பட வேண்டும். எனவே, அனைத்து விபரங்களையும் பெற்றவுடன் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு வருவதற்கு முன்னர் உரிய உடன்படிக்கை தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிக்கப்படும். அதன்பின்னர் அமைச்சரவை விளக்கமளிக்கும். அப்போது எதிர்க்கட்சிகள், சபாநாயகர், ஆர்வமுள்ள தரப்பினர் சகலரும் அழைக்கப்படுவார்கள் என ஜனாதிபதி கூறியதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.



## வெளி கடனாளிகளுக்கு விளக்குகிறது இலங்கை

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுக்கு வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இலங்கை நிதியமைச்சு தெளிவுபடுத்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைய பொருளாதார முன்னேற்றங்கள், நாணய நிதிய பொதியின் நோக்கங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் அடுத்த படிகள் குறித்து கடன் வழங்குநர்களுக்கு இலங்கை நிதியமைச்சு விளக்கமளிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் சுமார் 2.9 பில்லியன் டொலர் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 48 மாத ஏற்பாட்டுடன் இலங்கையின் பொருளாதார கொள்கைகளை ஆதரிப்பதற்கான பணியாளர் மட்ட உடன்பாடு, கடந்த 1ஆம் திகதி எட்டப்பட்டது.

அதற்கமைய கடன் வழங்குநர்களிடம் இருந்து கடன் மறுசீரமைப்புக்கான உத்தரவாதத்தை இலங்கை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொள்கலன்களை திருப்பி அனுப்பியது திரிபோஷ

திரிபோஷ உற்பத்திக்கான மூலப் பொருட்களுக்கு மேற்கொள்ளப்படும் ஆய்வக பரிசோதனையின் போதே அஃப்ளடொக்சின் அதிகமாக காணப்பட்டமை தெரியவந்துள்ளது என்று தெரிவித்தார்.

திரிபோஷவின் தரம் குறித்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே, அஃப்ளடொக்சின் அதில் அடங்கியிருந்தமை கண்டறியப்பட்டதாகத் தெரிவித்த அந்த அதிகாரி, கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு திரிபோஷ பொதிகளை விநியோகிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, திரிபோஷ குறித்து முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் திரிபோஷ நிறுவனத்தின் நிலைப்பாட்டை விளக்கும் அறிக்கையொன்று அதன் தலைவரினால் சுகாதார அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ள திரிபோஷ பொதிகளை பெற்றுக்கொள்வதா, இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர், வைத்தியர் சித்ரமலீ டி சில்வா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு ரயில்சேவை...

பாராளுமன்றத்தில் நேற்று (22) தமிழ் பத்திரிகைகளின் பாராளுமன்ற ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடிய போதே அமைச்சர் இதனை தெரிவித்திருந்தார்.

அரச ஊழியர்களின் நலன் கருதி காங்கேசன்துறைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் விசேட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதே வேளை வடக்குக்கான இரவு சொகுசு ரயில் சேவைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தியாவின் நிதி உதவித்திட்டத்தின் கீழ் வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு பணிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. அனுராதபுரத்திற்கும் ஓமந்தைக்குமிடையிலான ரயில் பாதையே புனரமைக்கப்படவுள்ளது. மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஜனவரி மாதம் முதல் ஐந்து மாதங்களுக்கு வடக்கிற்கான ரயில் சேவைகள் நிறுத்தப்படவுள்ளன என்றார்.




## விசேட புத்தகக் கண்காட்சிக்கு ஏற்பாடு

ஜனாதிபதி நேற்று (22) முற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்று வரும் 23 ஆவது கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக சென்றிருந்தார். இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படவுள்ள புத்தகக் கண்காட்சிக்கு இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் ஒத்துழைப்பை பெற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## ஒரு விமானத்தையாவது கொண்டுவாருங்கள்

பாராளுமன்றத்தில் நேற்று (22) சிவில் விமான சேவைகள் மீதான ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை தொலைக்காட்சி சேவைகள் மீதான ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்திற்காக பெருமளவான நிதி செலவழிக்கப்பட்டுள்ளது. பலாலி விமான நிலையத்திற்கு விமானங்களை கொண்டு வருவதற்காக அதனை திறந்து வைத்தோம். விமான நிலையத்தின் சேவைகளுக்காக யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இளைஞர்களையே நியமித்தோம். விரைவில் திறக்குமாறும், விமான நிலையத்திற்கு விமானங்களை கொண்டு வருவதாகவும் பல்வேறு நிறுவனங்கள் உறுதியளித்தன. ஆனால் கடந்த காலங்களில் எவரும் விமானத்தை கொண்டு வரவில்லை. விமானங்களை கொண்டு வர நடவடிக்கை எடுக்க முடியுமென்றால் அதனை கூட்டமைப்பினர் செய்ய வேண்டும். அதற்கு பின்னர் தேவையான வேலைகளை நாங்கள் செய்கின்றோம். பிரச்சினைகள் இருந்தால் எங்களுடன் கதைக்குமாறு கூறுங்கள். முடிந்தால் ஒரு விமானத்தையேனும் கொண்டுவந்து காட்டுங்கள். நாங்கள் எங்கள் பக்கத்தில் செய்ய வேண்டியவற்றை செய்துள்ளோம். ஆனால் அந்தப் பக்கத்தில் எதுவும் செய்யப்படவில்லை என்றார்.

## நோயாளர்களுக்கு உயிர் ஆபத்து

அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆக வரையறுப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை அமல்படுத்தும் சுற்றறிக்கை, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சினால் கடந்த 14ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதற்கமைய டிசம்பர் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விசேட வைத்திய நிபுணர்கள் 300 பேர், அரச சேவையில் இருந்து ஓய்வுபெற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த உத்தரவுக்கு அமைய கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 43 விசேட வைத்திய நிபுணர்களும் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் 15 விசேட வைத்திய நிபுணர்களும், அபேக்ஷா வைத்தியசாலையின் 09 விசேட வைத்திய நிபுணர்களும் ஓய்வு பெறவுள்ளனர். மேலும், கண்டி தேசிய வைத்தியசாலையின் 30 விசேட வைத்திய நிபுணர்களும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் 17 விசேட வைத்திய நிபுணர்களும், சுற்றறிக்கைக்கு அமைய ஓய்வு பெறவுள்ளதாக சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## தமிழர்களுக்கு எதிரான இனவாத திணைக்களம்

குருந்தூர் மலையில் புதன்கிழமை எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தொல்லியல் திணைக்களம் சட்டவிரோதமாக அங்கு கட்டிடங்களைக் கட்டுவதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தொல்லியல் திணைக்களம் இப்படியாக எங்களுடைய மக்களின் நிலங்களை மிக மோசமான முறையிலே அபகரிக்கின்ற திட்டங்கள் சம்பந்தமாக பல தடவைகளிலே நாங்கள் இந்த பாராளுமன்றத்திலும் வெளியிலும்



பேசியிருக்கின்றோம். 600க்கு மேற்பட்ட ஏக்கர் வயல் காணிகளை அபகரிக்கின்ற இந்த முயற்சி தடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் செய்த ஆர்ப்பாட்டத்திற்கு பிரதிபலனாக அவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள் இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதியோடு தமிழ் தேசிய கூட்டமைப்பு நடத்திய சந்திப்பில் இது குறித்து பேசினோம். பணிப்பாளர் நாயகத்துக்கு தான் உடனடியாக அறிவிப்பதாக உறுதியளித்திருந்தார். ஆனாலும் இந்த தொல்லியல் திணைக்களம் மிக மோசமான இனவாத திணைக்களமாக ,தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## டிசெம்பர் வரை எரிவாயு விநியோகம் இல்லை

மேலும், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் எரிவாயு முற்பதிவு நடைமுறைக்கு முன்னுரிமை வழங்குவதை நோக்காகக் கொண்டும் உள்ளூர் சந்தைக்கான விநியோகத்தை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள், இலங்கையில் வசிக்கும் அவர்களது உறவினர்களுக்காக புதிய எரிவாயு சிலிண்டர்களை டொலர்களைக் கொண்டு முற்பதிவு செய்யமுடியும் என்று லிட்ரோ நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்தது.

நாடு எதிர்நோக்கியுள்ள டொலர் நெருக்கடிக்கு தீர்வாகவே லிட்ரோ நிறுவனம் இந்த நடைமுறையை அறிமுகப்படுத்தியதுடன், வெளிநாடுகளில் உள்ள சில இலங்கையர்கள் டொலரை செலுத்தி புதிய சிலிண்டர்களை முற்பதிவு செய்துள்ளதாக நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## நல்லிணக்கத்தை...

இலங்கை பல்லின, பல மதங்களையும், கலாசாரங்களையும் கொண்ட ஐக்கியமான நாடாக உள்ளது. சகல இன, மத மக்களுக்குமான உரிமைகளையும், சமத்துவத்தையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இலங்கையின் அரசியல் அமைப்பிற்கு அமைவாக அடிப்படை உரிமைகள் சட்டமானது சகல இன, மத உரிமைகளையும் உறுதிப்படுத்துகின்றது. இதில் இனம், மதம்,சாதியம், பால் மற்றும் ஏனைய எந்த அடிப்படையிலும் பாகுபாடு இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் தேசிய மொழியாகவும், நிருவாக மொழியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அரசியல் ரீதியிலும் சகல இன மக்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளில் சிறுபான்மை மக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சமூகங்கள் மத்தியில் நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசாங்கம் முன்னுரிமை வழங்கியுள்ளது. சமூகங்களிற்கு இடையிலான ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வை கட்டியெழுப்புவதற்காக சமூக மற்றும் பாராம்பரிய வழமைகளை பின்பற்றி பல மட்டங்களில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. அத்துடன்

மதவெறுப்பு மற்றும் அலட்சியம் என்ற விடயத்தில் சகிப்புத்தன்மையை பூஜ்ஜியமாகவே அரசாங்கம் பின்பற்றுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாலின பாகுபாட்டுக்கு...

"தேசிய மறுசீரமைப்பும் எதிர்காலப் பயணமும்" என்ற வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டமாக ஆண் பெண் சமூக நிலை மற்றும் LGBTIQ துறையில் கொள்கை உருவாக்கம் தொடர்பான சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

பாலின அடிப்படையில் ஒருவருக்கொருவர் தீண்டுவதற்கும் ஒருவருக்கொருவர் பாகுபாடு காட்டுவதற்கும் ஒரு கட்சி என்ற ரீதியில் ஐக்கிய மக்கள் சக்தி எதிரானது என அவர் குறிப்பிட்டார்.

சில சமயங்களில் மக்கள் மத்தியிலுள்ள அறிவின்மை, சிந்தனை தேக்கம் உள்ளிட்ட குறைபாடுகள் காரணமாகவே இவ்வாறான தவறான புரிதல்கள் ஏற்படுவதாகவும் ஒரு சமூகம் முன்னேற்றமடையும் பொழுது தொழில் நுட்பம், பொருளாதாரம் மட்டுமன்றி அவர்களின் மனப்பாங்கிலும் முன்னேற்றமடைய வேண்டும் என்றார்.

பாலுறவு மற்றும் ஆண், பெண் பால் நிலை பற்றிய நோக்கு தனிப்பட்ட ஒருவரின் கருத்தே தவிர பாலுறவு மற்றும் பால் நிலையை வைத்து அவர்களை பிரித்து நோக்குவதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறே இன, மத, குலம் எதுவாக இருப்பினும் அனைத்து மனிதர்களையும் ஒரே சமமாக பார்க்க வேண்டும் என்றும் எல்லா வகையான பன்மைத்துவத்தையும் மதிக்க வேண்டும் என்றும் மேலும் தெரிவித்தார்.

## அறிகுறி தென்பட்டால்...

இதற்கு முன்னர் பரவி வந்த இந்த தொற்று, சிறுவர்களிடையே மீண்டும் பரவி வருவதாகவும் பெற்றோர் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என விசேட வைத்திய நிபுணர் குறிப்பிட்டுள்ளார். 6 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கே இந்த தொற்று ஏற்படுவதால், அவ்வாறான கொப்புளங்கள் மற்றும் தளும்புகள் காணப்படுமாயின் பிள்ளைகளை வெளி இடங்களுக்கு அனுப்பாது சில நாட்கள் வரை வீடுகளில் வைத்திருக்குமாறும் பெற்றோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## நெருக்கடியில் இருந்து...

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள், மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனும், இருதரப்பு கடன் வழங்குநர்களுடனும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் பேச்சுவார்த்தைகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து பேரவை கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும், இலங்கை தற்போது முன்னெடுத்து வருகின்ற, எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது கருத்துக்களை பகிர்ந்துகொண்டிருந்த துணைச் செயலர் விக்டோரியா, பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டுள்ள இலங்கைக்கு, நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கான சகல விதமான ஒத்துழைப்புகளை வழங்குவதுடன் அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும், சுதந்திரமான மற்றும் வளமான பிராந்தியத்திற்கு ஆதரவளிக்க நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட தயாராக உள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார். நாட்டின் மனித உரிமைகள், கருத்து சுதந்திரம் ஆகியவற்றை இலங்கை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.



# சர்வதேசத்தை நாடுகிறது 13பேர் அணி

பாராளுமன்றத்தில் தங்களின் பேச்சு சுதந்திரம் மற்றும் சிறப்புரிமைகள் மீறப்படுவதாக தெரிவித்து பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் டலஸ் அழகப்பெரும தலைமையிலான 13 பேர் கொண்ட குழு, சர்வதேச அமைப்புகளிடம் முறையிட தீர்மானித்துள்ளனர். அதற்கமைய 13 எம்.பிக்களின் கையெழுத்துகளுடன் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம், பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பின் பொதுச் செயலாளர் மற்றும் தெற்காசியாவின் சார்க் ஒன்றிய செயலாளர் ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் நேற்று (22) பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

சபையில் 13 எம்.பிக்களுக்கு பேசும் சுதந்திரம் முழுமையாக இல்லாது செய்யப்பட்டுள்ளது. திட்டமிட்டு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் இவ்வாறான நிலைமையே காணப்படுகின்றது. எம்.பியொருவருக்கு உரையாடுவதற்கு அவசியமென்றால் அதற்காக நேரம் ஒதுக்கப்படும். ஆனால் இந்த 13 எம்.பிக்கள் தொடர்பில் முழுமையாக மாற்று கொள்கையே பின்பற்றப்படுகின்றது. வேறு எந்தவொரு எம்.பிக்கும் அல்லாத விசேட சட்டம், சம்பிரதாயம் இந்த 13 பேர் தொடர்பில் செயற்படுத்தப்படுகின்றது. நேற்று (21) அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான முக்கியமான விவாதம் நடத்தப்பட்டது. இந்நிலையில் குறித்த 13 எம்.பிக்களிடையே பொருளாதார விடயங்களுடன் தொடர்புடையவர்கள், சட்டத்தரணிகள், கலாநிதிகள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் இருக்கின்றனர். இதன்படி இந்த விவாதத்தில் கலந்துகொள்வதற்காக மிகவும் விருப்பதுடன் இருந்தோம். அதற்கு இடமளித்திருந்தால் விவாதத்திற்கு மேலும் பெறுமதி சேர்க்கப்படும். ஆனால் திட்டமிட்டு அதற்கு இடமளிக்கப்படாது என்று பேசுவதை தடுத்துள்ளனர். இது பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை பாதிக்கும் விடயமாகும்.



அது மட்டுமன்றி மக்களின் இறையான்மை, மக்களின் அபிப்பிரயாம் என்பனவற்றுடனும் தொடர்புடையது. பிரச்சினைகள் தொடர்பில் கருத்து முன்வைப்பதற்கு அனைவருக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும். இதனையே தடுத்துள்ளனர்.

இதன் பாரதுர நிலைமை தொடர்பில் சர்வதேசத்திற்கு முன்வைக்கின்றோம். 13 எம்.பிக்களின் கையெழுத்துகளுடன் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளோம். அதேபோன்று பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பின் பொதுச் செயலாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். தெற்காசியாவின் சார்க் அமைப்பு செயலாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம் என்றார்.

கொழும்பில்

## உணவுப் பணவீக்கம் நூறு சதவீதத்தை தாண்டும்

கொழும்பு உள்ளிட்ட சனநெரிசல் மிக்க பிரதேசங்களில் உணவுப் பணவீக்கம் இந்த மாத இறுதியில் நூறு வீதத்தை தாண்டலாம் என எதிர்க்கட்சி உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா சபையில் தெரிவித்துள்ளார்.

குடிசன மதிப்பிட்டு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நாட்டின் பண வீக்கம் தொடர்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. வரலாற்றில் அதிகபட்ச பணவீக்கம் பதிவாகியுள்ளது. 70.7 வீதமாகவும், உணவு பணவீக்கம் 84.9 வீதமாகவும் பதிவாகியுள்ளது. இதில் கொழும்பின் பண வீக்கம் 94 வீதமாக உள்ளது. இதன்படி பெரும்பாலும் கொழும்பு உள்ளிட்ட சன நெரிசல் மிக்க பிரதேசங்களில் உணவுப் பணவீக்கம் இந்த மாத இறுதியில் நூறு வீதத்தை விடவும் அதிகரிக்கலாம் என்றார்.

## பழைய தரவுகளை வைத்து குற்றஞ்சாட்டுகின்றனர்

நாட்டில் திரிபோஷா தட்டுப்பாடு மற்றும் அதில் கலக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் அப்லோடொக்ஷின் பிரச்சினை உள்ளது என்பதை மறுக்கவில்லை. ஆனால் அப்லோடொக்ஷின் தொடர்பில் கடந்த ஒன்றரை மாதத்துக்கு முன்னர் இருந்த தரவுகளை கொண்டு தற்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதாரத்துறை கட்டமைப்பில் சில பிரச்சினைகள் உள்ளன என்பதை மறுக்கவில்லை. நச்சுத்தன்மையான திரிபோஷா குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சு விசேட கவனம்



செலுத்தியுள்ளது. திரிபோஷாவில்

அப்லோடொக்ஷின் கலந்துள்ளதாக கருத்து வெளியிட்டவரை அது தொடர்பில் தெளிவுப்படுத்துமாறு சுகாதாரத்துறை அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில் தனது சட்டத்தரணியின் ஆலோசனையை பெற்று விளக்கமளிப்பதாக அவர் அறிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்தவர்கள் அது மறுக்கப்பட்டதால் இவ்வாறான கதைகளைக் கூறுகின்றனர். அப்லோடொக்ஷின் தொடர்பில் கடந்த ஒன்றரை மாதத்துக்கு முன்னர் இருந்த தரவுகளை கொண்டு தற்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நாட்டில் திரிபோஷா பற்றாக்குறை,அப்லோடொக்ஷின் பிரச்சினை உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். அதேபோல் மந்தபோசணை மற்றும் திரிபோஷ விவகாரம் தொடர்பில் சபைக்கு விஞ்ஞான பூர்வமான அறிக்கையை சமர்ப்பிப்பேன்.அரசியல் மற்றும் வியாபார போட்டித்தன்மையை இலக்காக கொண்டு இவ்வாறான போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்றார்.

## சுயாதீன குழுவென இருக்க முடியாது

இலங்கையில் வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்ற முறைமையே உள்ளது. அதற்கமைய ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று இரண்டு பக்கங்களே இருக்க முடியும், நடுவே சுயாதீன குழுவென எதுவும் இருக்க முடியாது என ஆளும் கட்சி பிரதம கொரடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.இந்த முறைமைக்கு அமைய சபையில் உரையாற்றுவதற்கு போதுமான நேரத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் சுயாதீன அணி என்று கூறிக்கொண்டிருப்போர், தாம் ஆளும் கட்சியா? எதிர்க்கட்சியா? என்பதனை தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீனமாகுபவர்களை, கொல்வின் ஆர். டி. சில்வா மூன்று தலை கழுதைகள் என்று கூறியிருந்தார். ஆனால் நாங்கள் அப்படி கூறுவதில்லை. அவர்களுக்கும் பேசும் சுதந்திரம் உள்ளது என்றே நாங்கள்



ஏற்றுக்கொள்கின்றோம். 2015 ஆம் ஆண்டில் நாங்கள் சுதந்திரக் கட்சி தீர்மானம் எடுத்து நாங்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்தோம். அதன்படி நேரம் ஒதுக்கப்பட்டது. பாராளுமன்ற சம்பிரதாயப்படி அரசியல் கட்சிகளுக்கு அந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் விவாதத்தின் போது கிடைக்கும் நேரத்தில் ஆளும் கட்சியினருக்கு 30 வீதமான நேரமே கிடைக்கின்றது. 70 வீத நேரத்தை சுயாதீன குழுவும், எதிர்க்கட்சிக்கு சென்றவர்களும் கதைக்கின்றனர் என்றார்.

மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறையால்

## வருடாந்தம் ஐயாயிரத்திற்கும் அதிகமான புற்று நோயாளர்கள் உயிரிழக்கின்றனர்

தரமான மருத்துவ மற்றும் கதிர்வீச்சு உபகரணங்கள் பற்றாக்குறையால் வருடாந்தம் புற்று நோயாளர்களில் ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் தெரிவித்துள்ளார்.

சிறப்பான சுகாதார சேவையை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால் சுகாதார துறைக்கு போதுமான மருத்துவ உபகரணங்களை அரசாங்கத்தினால் விநியோகிக்க முடியாதுள்ளது. அத்துடன் புற்றுநோயாளர்களுக்கு தேவையான கதிர்வீச்சு உபகரணங்களுக்கான பற்றாக்குறை மற்றும் பாராமரிப்பு தொடர்பான பிரச்சினைகளால் அந்த நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அரச சுகாதார துறையில் ஆளணி முகாமைத்துவமும் பிரச்சினைகளுக்கு



உள்ளாகியுள்ளது. இதன்படி சில விடயங்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து பதில்களை எதிர்பார்க்கின்றேன்.


புற்றுநோய்க்காக பயன்படுத்தும் எலக்டா கம்பக்ட், எலக்டா செலர்ஜிக் பிளட்போர்ம், எலக்டா செலர்ஜி கதிர்வீச்சு உபகரணங்களை சுகாதார அமைச்சுக்கு பெற்றுக்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டதா? அந்த ஒப்பந்தத்தை சபையில் முன்வைக்க முடியுமா? அந்த உடன்படிக்கை தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக விநியோக தரப்பினருடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர் என்றார்.

மூன்று அமைச்சுக்களின்

## செயலாளர்கள் தூதுவரின் நியமனங்களுக்கு அனுமதி

மூன்று அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தூதுவர் ஒருவரின் நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர்பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய, ஜப்பானுக்கான புதிய தூதுவராக ரொட்னி மனோரஞ்சன் பெரேராவின் நியமனத்துக்கு உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளராக பீ.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி,




நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளராக பி.எச். சி. ரத்நாயக்க மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக எஸ். ஹெட்டியாரச்சி ஆகியோரின் நியமனங்களுக்கு உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கு மேலதிகமாக, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் தலைவராக எல்.எச். ரஞ்சித் சோபாலவின் நியமனத்துக்கும் இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் (LECO) தலைவராக அதுல பிரியதர்ஷன டி. சில்வாவின் நியமனத்துக்கும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவராக நிஷாந்த ரணதுங்கவின் நியமனத்துக்கு குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தின்

## விமானக்கட்டணங்கள், வரிகள் குறைக்கப்பட வேண்டும்

பலாலி சர்வதேச வினா நிலையத்தின் விமானக்கட்டணங்கள்,வரிகள் உடனடியாக குறைக்கப்பட வேண்டுமென தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான எம்.ஏ .சுமந்திரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22) இடம்பெற்ற சிவில் விமான சேவைகள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபன திருத்த சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

பலாலி சர்வதேச விமான நிலையம் இந்தியாவின் உதவியோடு அபிவிருத்தி செய்யப்பட்டு செயற்பாடுகள் தொடங்கப்பட்டபோதும் அது பின்னர் இடைநிறுத்தப்பட்டுள்ளது. பலாலி சர்வதேச விமான நிலைய விமானக்கட்டணங்கள் ,வரிகள் மிக அதிகம் என்பதனால் மக்களால் அதனை செலுத்த முடியாது. எனவே மத்தளை விமான நிலையத்தின் வரிகள் குறைக்கப்பட்டது போல் பலாலி சர்வதேச விமான நிலையத்தின் விமானக்கட்டணங்கள், வரிகள் குறைக்கப்பட வேண்டுமென விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் கோருகின்றேன். இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் உறுதியான ன சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்றார்.



ஆக்கிரமிக்கப்பட்ட நெற் செய்கை

# காணிகளை மீள வழங்க நடவடிக்கை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட நெற் செய்கை காணிகளை, காணி உரிமையாளர்களுக்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப், நேற்று (22) தெரிவித்தார்.

மிக நீண்டகாலமாக குறித்த காணிகளை பராமரித்து வரும் சட்டரீதியிலான காணி உரிமத்தைக் கொண்டுள்ள ஏழை விவசாயிகளின் காணிகளை வனஜீவராசிகள், வன இலாகா திணைக்களங்கள் சுவீகரித்து, வர்த்தமானி ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



இக்காணிகளை விடுவிப்பது தொடர்பாக வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் வன இலாகா, வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் காணி விடுவிப்பு தொடர்பான இறுதிக் கட்டபேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில் சுவீகரிக்கப்பட்டு, வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள காணிகளை உரிய விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அமைச்சர் மஹிந்த அமரவீர வாக்குறுதியளித்துள்ளார்.

2010, 2016 ஆகிய காலப்பகுதியில் வன இலாகா மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் நெற்செய்கை காணிகளை சுவீரித்து வர்த்தமானி வெளியிட்டிருந்தது.

மூன்று தசாப்த கோரிக்கையாக இருந்து வரும் இக் காணிகளை விடுவித்து, உடனடியாக காணி உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்ததாக தெரிவித்தார்.



காத்தான்குடி

# ஹோட்டல்களில் திடீர் சோதனை

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடியில் உணவு தயாரிப்பில் ஈடுபடும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், பேக்கரிகள் மற்றும் உணவு தயாரிக்கும் இடங்கள், நேற்று (22) திடீர் சோதனைகள் செய்யப்பட்டன.

இதன்போது, மனித பாவனைக்குதவாத உணவுகள் காணப்பட்ட சில ஹோட்டல்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, அவைகளை சீர் செய்வதற்காக கால அவகாசமும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சுகுணன் தலைமையில், அவரது வழிகாட்டலில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் என 60 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்தச் சோதனை நடவடிக்கை மாவட்டம் முழுவதும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதில் ஒரு கட்டமாக காத்தான்குடி சுகாதார அலுவலகப் பிரிவிலுள்ள உணவு தயாரிப்பில் ஈடுபடும் இடங்கள் சோதனை செய்யப்பட்டதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சுகுணன் தெரிவித்தார்.

# குடும்பஸ்தர் குத்திக் கொலை

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள கிளிவெட்டி, பாரதிபுரம் கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உடற் கூறாய்வுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம், நேற்று (22) உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை (20) இரவு இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில், பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயியான மூன்று பிள்ளைகளின் தந்தை சோமசுந்தரம் சிறிகந்தராசா (வயது 50) என்பவரே குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் மின்சாரம் தடைப்பட்டிருந்த சமயத்தில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறிகந்தராசாவின் வீட்டுக்கு வந்து அவரை வெளியே வருமாறு அழைத்த சந்தேகநபர், தன்வசம் வைத்திருந்த கத்தியால் அவரை குத்தி விட்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த அருமைத்துரை கிருபாகரன் (வயது 47) எனும் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆயுர்வேத

# வைத்தியர்களின் எதிர்கால திட்டங்கள்

■ நூருல் ஹுதா உமர்

ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் வைத்தியர்களுக்கிடையேயான கலந்துரையாடல், காரைதீவு பிரதேச செயலகத்தில், பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் நேற்று (22) இடம்பெற்றது.

சுதேச வைத்திய அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் வைத்தியர்களின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கலந்துரைக்கப்பட்டன.



காரைதீவு பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பாத்தீபன், ஆயுர்வேத சமூகநல உத்தியோகத்தர், ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் வைத்தியர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# மேட்டு நிலப் பயிர்செய்கை செழிக்க உதவுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

■ கனகராசா சரவணன்

மேட்டு நிலப் பயிர் செய்கைக்குத் தேவையான டீசல், உரம், கிருமிநாசினி மற்றும் மண்ணெண்ணெய் போன்றவற்றை உடனடியாக அரசாங்கம் வழங்க வேண்டுமென மட்டக்களப்பு ஆயித்தியமலை, உன்னிச்சை மற்றும் ஒளியமடு பிரதேசத்தில் மேட்டு நிலப்பயிர் செய்கை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுணதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒளியமடு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் சங்கத் தலைவர் பொன்னுத்துரை திலீபன் தலைமையில் நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, விவசாயிகள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் "மேட்டு நிலப் பயிர் செய்ய வேண்டும் என அரசாங்கம் சொல்கின்றது. ஆனால், எப்படிச் செய்வது? உரம், கிருமிநாசினி, டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியன இல்லை.

"சோளம் பயிரிடுபவர்களுக்கு உரம் மானியமாக கொடுப்பதாகத் தெரிவித்தனர். எனினும், அது கிடைக்கவில்லை. புளு காரணமாக சோளம் பாதிக்கப்பட்டபோது, அதற்கு நட்டஈடு தருவதாக அரசாங்கம் அறிவித்தபோதும் அதுவும் கிடைக்கவில்லை.

"அதேவேளை, குடிமனைக்குள் யானைகள் ஊடுருவலால் யானைகளின் தாக்குதலுக்கு உள்ளாகி பலர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தும் பல வீடுகள் சேதமாக்கப்பட்டும் உள்ளன. மேலும், பயிர் செய்கைகளை யானைகள் அழித்து வருகின்றன" எனறார்.

தம்பட்டை கடற்கரையில்

# கரையொதுங்கிய ஆணின் சடலம்

■ எஸ்.கார்த்திகேசு

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பட்டை கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம், நேற்று (22) கரையொதுங்கி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பட்டை - 02, சித்திவிநாயகர் கோவிலுக்கு முன்பாக உள்ள கடற்கரையோரம் கரையொதுங்கிய சடலம், தம்பிலுவிலைச் சேர்ந்த பி.ஜெயகாந்தன் என்றும் அவர் வவுனியா விவசாயக் கல்லூரி விரிவுரையாளர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்

# எழுச்சிபூர்வமாக நடைபெறும்

■ வி.நிதர்ஷன்

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இம்முறை எழுச்சிபூர்வமாக நடைபெறும் என யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (22) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த காலங்களை விட இம்முறை நிலைமை சற்று சீராகக் காணப்படுவதால், தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை இம்முறை எழுச்சியாக நினைவுகூருவதற்கு தீர்மானித்துள்ளோம்.

"அவர் இனத்தின் அடையாளம் என்ற படியால், அவர் மக்களுக்கு சொந்தமானவர். ஆகவே, நினைவேந்தல் நிகழ்வுகளை கட்சி மற்றும் அமைப்புகள் சாராமல், பொதுவாக உருவாக்கப்பட்டுள்ள குழுவே, இம்முறை மேற்கோள்ளும்.




"நினைவேந்தல் இடம் மாநகர சபை எல்லைக்குள் இருக்கிறது. ஆகவே, அதற்கான வழிமுறைகளை மாநகர சபை என்ற ரீதியில் கூறுவது சரியாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

"நினைவு தினமன்று, கவி அரங்கம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளை நடத்துவதற்கு நினைவேந்தல் குழு தீர்மானித்துள்ளது. அதற்கு அமைவாக நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

"இது தவிர, சில தரப்புக்கள் நினைவேந்தல்களை மேற்கொள்ள விட மாட்டார்கள்; குழப்புவார்கள். ஆகவே, இம்முறையும் குழப்பம் வரலாம். அதற்கான வேலைகளை அரசு தரப்பு மேற்கொண்டுள்ளது.

"கடந்த காலங்களில் உள்ள அரசு வேறு ஒரு வழியை கையாண்டது. இம்முறை உள்ள அரசு குழப்புவதற்காக கும்பல்களை ஏவிவிடும் வாய்ப்புகள் உள்ளது.

"ஆகவே, இவற்றை எல்லாம் கடந்து எழுச்சியாக இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ளுவோம்" என்றார்.

முல்லைத்தீவு மாவட்ட

# விவசாய குழுக் கூட்டம்



■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்ட விவசாய குழுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தலைமையில், நேற்று (22) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், மாவட்டத்தில் விவசாய செய்கை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக பயிர்ச்செய்கையின் தற்போதைய நிலை, விவசாயத்துடன் தொடர்புடைய திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள், விவசாயிகளின் பிரச்சினைகள், உர விநியோகம், எரிபொருள் விநியோகம், காப்புறுதி மற்றும் வங்கிகளின் விவசாய கடன் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மாவட்ட விவசாய பணிப்பாளர் ஆர்.கோகுலதாசன், மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் ம.கி வில்வராஜா, மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் மு.முபாரக், பிரதேச செயலாளர்கள், துறைசார் உயர் அதிகாரிகள், துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# போதைப்பொருள் விற்ற 11 வயது மகள் மீட்பு

## பெற்றோருக்கு எதிராக வழக்கு



■ எம்.றொசாந்த்

தாயாரால் போதைப்பொருள் விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட பதின்ம வயது மகள், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளினால் மீட்கப்பட்டு, நீதிமன்றின் உத்தரவில் சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த 11 வயதுச் சிறுமியே நேற்று முன்தினம் (21) இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமி, 4 மாதங்களுக்கு மேலாக பாடசாலைக்கு செல்லாத நிலையில், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், தாயாரின் பாதுகாப்பிலிருந்து அவர் மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் சிறுமி முற்படுத்தப்பட்ட போது, அவரை சிறுவர் இல்லத்தில் சேர்த்து பராமரிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டமை தொடர்பில் சிறுமியின் பெற்றோர் மீது நீதிமன்ற வழக்குகள் உள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தொற்று மீண்டும் அதிகரிப்பு

# தடுப்பூசி ஏற்றல் குறித்து கலந்துரையாடல்

■ வி.நிதர்ஷன்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றல் தொடர்பான கலந்துரையாடல், மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில், மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (21) காலை நடைபெற்றது.

நாட்டில் கொவிட் - 19 தொற்று மீண்டும் அதிகரித்து வரும் நிலையில், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கட்டாயமாக மூன்றாவது, நான்காவது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாவிடில், இறப்புகள் அதிகம் ஏற்படும் சந்தர்ப்பம் உள்ளதாக குறிப்பிடப்பட்டது.

அத்தோடு, பொதுமக்களுக்கு பைஸர் தடுப்பூசிகளை ஏற்றுதல் தொடர்பான அறிவுறுத்தல்களையும், விழிப்புணர்வுகளையும் வழங்குமாறும் பிரதேச செயலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், சமுதாய வைத்திய நிபுணர் சு.சிவகணேஷ் மற்றும் பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.



சங்கிலியன் தோரண வாயில்

# புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள், நேற்று வியாழக்கிழமை (22) ஆரம்பிக்கப்பட்டன.

தொல்லியல் திணைக்களமும் யாழ்ப்பாண மரபுரிமை மையமும் இணைந்து புனர்நிர்மாண பணிகளை ஆரம்பித்துள்ளன.

இதற்காக 2.3 மில்லியன் ரூபாய் செலவு மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதற்கான நிதி பங்களிப்பை, யாழ்ப்பாண மரபுரிமை மையம் வழங்கவுள்ளது.

குறித்த தோரண வாயிலின் பாதுகாப்பு, புனர்நிர்மாணம் மற்றும் நில வடிவமைப்பு ஆகிய செயற்றிட்டமே முன்னெடுக்கப்படவுள்ளது.

சங்கிலியன் தோரண வாயில் அல்லது சங்கிலித்தோப்பு வளைவு என அழைக்கப்படுவது யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னனான சங்கிலியனின் மாளிகை அமைந்திருந்த இடம் எனக் கருதப்படுகின்றது. சங்கிலித் தோப்பு வளைவு, யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சிறிது தூரத்தில் அமைந்துள்ளது.

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

# சர்வதேசத்திடம் எடுத்துரைப்பு




இந்தியாவின் தலைநகரமான புதுடெல்லியில் நடைபெறும் தெற்காசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் விசேட மாநாட்டில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி மலையக மக்கள் சார்பாகக் கலந்து கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், மலையக மக்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள் மற்றும் மலையக மக்களின் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக சர்வதேச அரங்கில் எடுத்துரைத்தார்.

இதன்போது, தற்போது இலங்கையில் விசேடமாக பெருந்தோட்ட மக்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள், தொழில் சட்டங்கள் மீறப்படுவது, சர்வதேச தொழிலாளர் உரிமைகள் மீறப்படுவது தொடர்பில் சர்வதேசத்திடம் சுட்டிக்காட்டியதாகத் தெரிவித்தார்.

அத்துடன், தொழிலாளர்கள் தற்போது முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் செலவு, அவர்களுடைய ஊதியம் தொடர்பான பிரச்சினைகள், பெருந்தோட்ட நிர்வாகங்களின் மனித உரிமை மீறல் தொடர்பாக சர்வதேசத்திற்கு தெரியப்படுத்தியதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தொடர்ந்தும் குரலெழுப்பி இருந்தபோதிலும், நடைமுறையில் சாத்தியப்படக் கூடிய எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. ஆகவே, இந்த நிலைமை தொடர்பாக சர்வதேசத்திற்கு எடுத்துரைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் தெற்காசிய நாடுகளுடைய சர்வதேச தொழிற்சங்க பிணக்குகள், அப் பிணக்குகளுக்கு தீர்வு எவ்வாறு பெறப்பட வேண்டும் என்ற தலைப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த விசேட மாநாட்டில், சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## இரத்ததானம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 109 ஆவது ஜனன தினத்தையும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 159 ஆவது வருட பூர்த்தியையும் முன்னிட்டு ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் இரத்ததான நிகழ்வு நேற்று (22) நடைபெற்றது.

(பி. கேதீஸ்)

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில்

## ஊடகவியலாளர்களுக்கு தெளிவுப்படுத்தல்

என்.ஆராச்சி

அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையைப் பலப்படுத்துவதற்காக, பிரதேச ரீதியில் உடகவியலாளர்களை தெளிவுப்படுத்தும் வேலைத்திட்டமானது, கேகாலை மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்று (23) கேகாலை, புவுக்தெனிய சில்க் ஹோட்டலில் காலை 9 மணிக்கு இந்தத் தெளிவுப்படுத்தும் செயலமர்வு நடைபெறவுள்ளதென, கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய தெரிவித்தார்.

கேகாலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வில், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் மக்களைத் தெளிவுப்படுத்தல், தகவல்களை கிராமிய மட்டங்களில் முன்னெடுத்துச் செல்லல், அனர்த்தங்களை குறைத்துக்கொள்ளல், அதனால் ஏற்படும் சொத்து இழப்புகளை குறைத்துக்கொள்ளல் போன்றவை தொடர்பில் பிரதேச ஊடகவியலாளர்கள் தெளிவுபடுத்தப்படவுள்ளனர்.

## ஹட்டனில் உலக சமாதான தினம் அனுஷ்டிப்பு



நீலமேகம் பிரசாந்த்

உலக சமாதான தினத்தையொட்டி, இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையின் ஏற்பாட்டில் 'விஷ்வ கீர்த்தி' ராஜ் பிரசாத் தலைமையில் ஹட்டனில் நடைபெற்ற நிகழ்வில், உலக சமாதானம் பற்றிய கருத்துகள் மற்றும் விளக்க உரைகள் ஆகியன தெளிவுபடுத்தப்பட்டதோடு விருதுகளும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் இலங்கை சமாதான நீதிவான்கள் பேரவையின் ஆளுநர் 'விஷ்வ கீர்த்தி' கலாநிதி இளங்கோ காந்தி மற்றும் ஹட்டன் வடக்கு 319 'B' பிரிவின் கிரம உத்தியோகத்தர் சிவலிங்கம் சுரேஷ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோர்களுக்கு அவர்களின் சேவைகளை பாராட்டி 'மகாத்மா காந்தி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு வறுமை கோட்பாட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## விவசாயிகளை அரசாங்கம் பாரபட்சம் காட்டுகின்றது

எஸ். கே. குமார், ரஞ்சித் ராஜபக்ஷ

அரசாங்கம் நெல் உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் சலுகைகள் மற்றும் நிவாரணங்கள், மலையக மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் தலைவர் அருணசாந்த ஹெட்டியாராச்சி கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவித்த அவர், இலங்கையில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு மூட்டை யூரியா 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், மலையகத்தில் மரக்கறி உற்பத்தி செய்யும் விவாசாயிகளுக்கு 29 ஆயிரம் ரூபாவுக்கு ஒரு மூட்டை யூரியா விற்பனை செய்யப்படுகிறது. இதனால் மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். யூரியா வழங்குவதில் பாரபட்சம் காட்டாமல் மலையக மரக்கறி உற்பத்தியாளர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாவுக்கு யூரியா வழங்க வேண்டும்.

மலையக மரக்கறிகளுக்கு பயன்படுத்தப்படும் உரவகைகள் மற்றும் மருந்து வகைகளும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மலையக விவசாயிகளுக்கு பெற்றோலும் மண்ணெண்ணெய்யும் கிடைப்பதில்லை.

நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பெட்ரோலும் மண்ணெண்ணெய்யும் பர்மிட் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. ஆனால் மலையக மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய்யும் பெற்றோலும் கிடைக்காததால் தண்ணீர் பாய்ச்சும் இயந்திரத்தை இயக்க முடியாமல், மரக்கறிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் அவஸ்தைப்படுகின்றார்கள்.

மலையகத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் இலங்கை முழுவதும் கொண்டுசெல்லப்படுகின்றன. மக்களும் மலையகத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளையே விரும்பி உண்ணுகின்றார்கள். மரக்கறிகள் இறக்குமதி செய்வதில்லை. ஆனால் அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது. எனவே உள்ளூரில் உற்பத்தி செய்யும் மரக்கறி உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேராதனை பல்கலை தாக்குதல் சம்பவம்

## கைதான மாணவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்

ஷேன் செனவிரத்ன

பேராதனை பல்கலைக்கழக சட்டபீட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் மூன்று மாணவர்கள் நேற்றுமுன்தினம் (21) மாலை கைதுசெய்யப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னர், பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்த நான்கு மாணவர்கள் மீது, இந்த மாதம் 14ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது, இரண்டு மாணவிகள் உள்ளிட்ட நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான மாணவர்களின் வாக்குமூலத்துக்கு அமைய, சட்டபீடத்தின் 3 மாணவர்கள் வகுப்புத் தடை செய்யப்பட்டுள்ளதுடன், நேற்றுமுன்தினம் மாலை அவர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு தரப்பினரையும் எதிர்வரும் நாள்களில் மத்தியஸ்த சபையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளையில் ஹோட்டல் துறைக்கான

## பயிற்சி நெறிகள் ஆரம்பம்

மகேஷ் கீர்த்திரத்ன

மத்திய மாகாண பிராந்திய பொருளாதார அபிவிருத்தி அதிகார சபையால் (REDA), மாத்தளை ஹோட்டல் மற்றும் சுற்றுலாப் பாடசாலை ஊடாக பல பயிற்சி நெறிகள் நடத்தப்படுகின்றன.

2022ஆம் ஆண்டில் பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி, ஹோட்டல் முகாமைத்துவம் பாடநெறியின் 6வது தொகுதிக்கான மாணவர்களை ஆட்சேர்ப்பு நேற்று (22) மாத்தளை ஹோட்டல் பாடசாலை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியில் சுமார் 52 மாணவர்கள் இணைந்துள்ளனர்.

ஹோட்டல் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் அதிகம் வேலைவாய்ப்புகள் காணப்படுவதால், மத்திய மாகாண இளைஞர் சமூகத்தின் எதிர்கால வெற்றிக்காக, இந்தப் பாடநெறிகள் உதவிப் பணிப்பாளர் திருமதி என்.டபிள்யூ லக்ஷ்மியின் ஆலோசனையின் பேரில் நடத்தப்படுகின்றன.

இந்தப் பாடசாலை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருப்பதால், தொழிற்பயிற்சி ஆணையத்தின் பதிவுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.



பிரவுன்ஸ்வீக் தோட்ட மக்கள்

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்

எஸ்.கணேசன்

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்ட தொழிலாளர்கள் தங்களுக்கு அங்கிகரிக்கப்பட்ட நாளாந்த சம்பளம் 1,000 ரூபாயை உடனடியாக வழங்குமாறு கோரி நேற்று முன்தினம் (21) தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரவுன்ஸ்வீக் தேயிலைத் தோட்டங்களின் 07 பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் கட்சி பேதமின்றி இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் 22 தோட்டக் கம்பனிகள் உள்ளதாகவும், அதில் மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனி மாத்திரம் ரூ.1,000 கொடுப்பதில்லை எனவும் தெரிவித்தனர். அத்தோடு, நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி தற்போது பொருளாதார நெருக்கடியால் தவிக்கும் தோட்டத் தொழிலாளர்களை மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் பாதாளத்திற்கு



தள்ளியுள்ளது. 01 கிலோ கிராம் மாவின் தற்போதைய விலை 400 ரூபாய் எனவும், மூன்று வேளை மாவு உணவை உண்ணும் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறு 200 முதல் 300 ரூபாய் வரை சம்பளம் பெற்று வாழ்வார்கள் எனவும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தோட்ட உரிமையாளர்களால் அங்கிகரிக்கப்பட்ட 1,000 ரூபாயை மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு மாத்திரம் வழங்க முடியாவிட்டால் வேறு நிறுவனத்திடம் வழங்குமாறு கோரிக்கை விடுப்பதாகவும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் சுமார் 400ற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் கலந்துகொண்டதுடன், போராட்டத்தின் பின்னர் தோட்டத் தொழிலாளர்கள் வழமை போன்று தமது அன்றாட சேவைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இருட்டுக்குள் வைத்து கடவுள்களையும் சோதிக்கும் முயற்சி

ஓகஸ்ட் 10 ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன. சுமார் ஒன்பது வருட காலத்துக்குப் பின்னர், இந்த மின்கட்டண அதிகரிப்பு அமல்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்காக காரணம், மின்உற்பத்திக்கான செலவு அதிகரித்து இருக்கின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கட்டண அதிகரிப்பு அறிவிப்பை அடுத்து, முதல் மாத மின்கட்டணப் பட்டியல், கடந்த வாரம் விநியோகிக்கப்பட்டிருந்த நிலையில், மக்கள் மத்தியில் பெரும் 'கொதிப்பு, அதிர்ச்சி' உணர்வுகளை ஏற்படுத்தி இருந்தது.

குறிப்பாக, நாட்டின் பல பாகங்களைச் சேர்ந்த விகாரைகளின் தேரர்கள் ஊடகங்களின் ஊடாக, "வழிபாட்டுத் தலங்களுக்கான மின்கட்டணம் 555 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது; நிவாரணம் வழங்காவிடின், அடுத்த மாத பூரணையின் போது, நாடு முழுவதிலுமுள்ள சகல விகாரைகளிலும் விளக்குகளை அணைத்து, எமது எதிர்ப்பை வெளியிடுவோம்" என்று எச்சரித்திருந்தனர்.

விகாரைகள் இலாமீட்டும் நிறுவனங்கள் அல்ல; வழிபாட்டுத் தலங்கள். இவற்றுக்கு வருமானம் கிடைப்பது, பொது மக்கள் வழங்கும் உபயங்களின் ஊடாகவேயாகும். இன்னும் சில விகாரைகள், தமக்குச் சொந்தமான சொத்துகளை குத்தகைக்கும் வாடகைக்கும் வழங்கி, அதனூடாகக் கிடைக்கும் வருமானங்களில் மூலம் தமது செலவுகளை முகாமைத்துவம் செய்கின்றன.

இந்நிலையில், வழிபாட்டுத் தலங்களின் மின்பாவனையை கட்டுப்படுத்துவதற்காகவே, இந்த மின்கட்டண அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டதாகவும் புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களைப் பயன்படுத்தி, வழிபாட்டுத் தலங்கள் தமது மின் தேவையை பூர்த்தி செய்து கொள்வது பற்றிக் கவனம் செலுத்த முயல வேண்டும் என மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்திருக்கிறார். இதனூடாக, அவர் இந்தப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க எத்தனிக்கிறார்.

விகாரைகள் போன்ற வழிபாட்டுத் தலங்கள் இருளில் மூழ்குவதற்கு அப்பால், நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள், அதிகரித்துள்ள மின் கட்டணத்தை தாங்கிக் கொள்ள முடியாது, தமது வீடுகளில் இரவு வேளைகளில் ஓரிரு மின்விளக்குகளை மட்டுமே ஒளிரவிடுவதாகத் தெரிவிக்கின்றனர்; தாம் எதைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்பது பற்றியும் பக்குவமடைந்து வருகின்றனர். பல மடங்குகளில் அதிகரித்த சில அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களின் விலைகள், பத்து சதவீதத்தால் குறைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், மக்கள் அவற்றை வாங்குவதில் நாட்டம் காண்பிப்பதாக இல்லை.

ஒரு வருட காலமாக அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுத் துயரத்தை அனுபவித்து வரும் மக்களின் உள்ளக் குமுறல்கள், 'இந்தக் கடவுளுக்கு கண் இல்லையா' என்பதாக அமைந்துள்ளது. கடவுள் வாழ்வதாக நம்பப்படும் வழிபாட்டுத் தலங்களை, இதனாலோ என்னவோ கண்கொண்டு கைகூப்பி வணங்க முடியாதவாறு, இருளில் வைத்து சோதித்துப் பார்க்கப் போகின்றனர் போலும்!




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

உங்கள் வாழ்க்கையை நீங்களே கண்டு பிடியுங்கள். எவருடைய உதவியும் கிடைக்காது விட்டால், நீங்களே உங்களுடைய அறிவின் மூலமும் பெற்ற அனுபவங்களின் மூலமும், உங்களை நீங்களே சுயஅலசல் அலசி, வாழ்க்கையில் வெற்றிகளைப் பெறுவீர்களாக!

சிலசமயங்களில் தொடர்ந்து வரும் துன்பங்களின் மூலம் மனம் அல்லல்ப்பட்டு விடுகின்றது. எங்களை நாங்களே கண்டுபிடித்தால், எங்களால் சுயமாக வெற்றி பெற்றுவிட முடியும்.

எல்லோரையும் நம்பி வாழ முடியாது. இது வெட்கப்பட வேண்டிய விடயம். உதவி செய்ய விருப்பமில்லாதவர், வேண்டுமென்று தகாத கருத்துகளைச் சொல்லி, நிலை தடுமாற வைத்துவிடுவார்கள்.

உங்களை நம்பாமல் பிறரை நம்புவது தவறு அல்லவா? துணிவுடன் உங்கள் எண்ணங்களுக்கு மதிப்பு அளியுங்கள். மிகப்பெரிய சாதனையாளர்கள் தங்களது அறிவு, நம்பிக்கை ஆகியவை மூலமாகவே வெற்றி பெற்றுள்ளார்கள்.

இந்த உலகில், எதுவுமே முடியாத காரியங்கள் இல்லை. எங்களை மீறி எதுவும் நடக்காது என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## இன்னொரு மக்கள் எழுச்சிக்கான சாத்தியமும் சவால்களும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலை மக்களை நிலைகுலைய வைத்துள்ளது. தீபாவளிக்குத் தீர்வு வரும் என்பது போல, 'இலவுகாத்த கிளி'யாக, நிலைமை சீராகும் என்று இலங்கை மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

இன்று எமது தேசிய இனப்பிரச்சினை, அனைத்துத் தரப்புகளாலும் அந்நிய சக்திகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. சிங்கள மேலாதிக்கத்தாலும் அதன் ஒடுக்குமுறை அணுகுமுறைகளாலும் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் ஆகிய தேசிய இனங்கள் மீதும் பறங்கியர், வேடர்கள் ஆகிய சிறிய சமூகங்கள் மீதும் சொல்லொணா துயரங்களும் கொடுமைகளும் ஒடுக்குமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

விவசாயத்துறையில் நவதாராளவாத பொருளாதாரத் திட்டங்கள், ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழ் முன்னெடுக்கப்பட்டதன் விளைவுகளை இப்போது நாம் காண்கிறோம். அவற்றின் பாதிப்புகள் காரணமாக, மக்கள் தொடர்ச்சியாக அவற்றை எதிர்த்து வருகின்றபோதும் தொடர்ச்சியான அரசாங்கங்கள் அவற்றை நிறுத்தாது முன்னெடுத்தும் வந்தன. தன்னிறைவை அடிப்படையாகக் கொண்ட தேசிய பொருளாதாரத்தின் உயிரணுக்களை, 'உலகமயமாதல்' என்ற நிகழ்ச்சி நிரல் அழித்துவிட்டது.

பாதிக்கப்பட்ட விவசாயிகள், தொழிலாளிகள், நடுத்தரவர்க்கத்தினர் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மேலும் மோசமடைந்து கொண்டிருக்கும் தாராள தனியார்மய சூழ்நிலையானது, எதிர்கால சந்ததிக்கு இந்நாட்டு வளங்கள் விட்டு வைக்கப்படாது என்பதை உறுதி செய்கின்றன.

இலங்கையரின் நல்வாழ்க்கை, சுயகௌரவம், சுயமரியாதை, சொத்துகள், ஜனநாயகம், மனித உரிமைகள் போன்றவற்றைப் பாதுகாப்பதில் அரசியலமைப்பு, ஜனாதிபதி ஆட்சிமுறை, பாராளுமன்ற ஆட்சிமுறை ஆகியன முழுமையாகத் தோல்வியடைந்துள்ளன.

மக்கள், 'காய்ந்த சருகாக' மாறி வருகிறார்கள். அதன் மீது சிறிய தீப்பொறி பட்டாலேயே பெரிய காட்டுத்தீயை உண்டாக்கி விடும். அவ்வாறான ஒரு சிறிய தீயே, காலிமுகத்திடலை மையங்கொண்ட போராட்டமாகும்.

இன்றைய நெருக்கடி உயர், மத்தியதர வர்க்கத்தினருக்கும் பெரும் சொத்துடைய சிலருக்கும் கூட நிச்சயமற்ற சூழலை உருவாக்கியுள்ளது. அதனால், சாதாரண மக்கள் மட்டுமன்றி ஓரளவுக்கு வசதிவாய்ப்புகளுடன் வாழ்கின்றவர்கள் கூட, மாற்று அரசியல் நடவடிக்கைகள் மூலமான மாற்றங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளனர். அத்தகைய மாற்று அரசியல் சாத்தியமானதா?

இலங்கையின் ஆளும் அதிகார அடுக்கின் பண்பு, ஏகாதிபத்தியத்தின் வாடிக்கையாளர்களாக செயற்படுவதையே பிரதிபலிக்கின்றது. இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஆடுகின்ற அரசாங்கத்தின் செயல்கள், இதன் அண்மைய உதாரணமாகும்.

அரசியல், சமூகம் ஆகிய தளங்களில், அரசின் கொள்கைகள், வன்முறை, யுத்தம், இனக்குரோதம், மதவெறி என்பனவற்றையே பிரதான அணுகுமுறையாகக் கொண்டுள்ளன. நிலைமைகளை சீர்செய்வதற்கான சீர்திருத்தங்களையோ இணக்கப்பாடுகளையோ ஏற்படுத்திக் கொள்ளும் நிலையில், இன்றைய அதிகார அடுக்கின் தலைமைகள் இல்லை.

இத்தகைய அதிகார அடுக்குக்கு எதிராகவும் உறுதியாகவும் முன்னெடுக்க வேண்டிய போராட்ட வழிமுறைகளுக்கும் பழைய அரசியல் ஸ்தாபனங்களின் நடைமுறைகளுக்கும் இடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன.

பழைய, சுரண்டுகின்ற பிற்போக்கு வர்க்கங்களுக்கும் இன்றைய கொள்ளைக்கார அதிகார அடுக்குகளுக்கும் இடையே, அவற்றின் ஆட்சிமுறை மூலோபாயம், தந்திரோபாயம் போன்றவற்றில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. இந்த வித்தியாசங்களைப் பார்க்கின்ற போது, மக்கள் சார்பான இன்றைய போராட்ட அணுகுமுறைகள், பொருத்தமானவையா என்ற கேள்வி எழுவது இயற்கையானது.

எனவே, மக்களது பழைய அணுகுமுறைகளை முற்றாக மாற்றி, புதிய முயற்சிகளும் புதிய மாதிரியான போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகள் போன்ற வர்க்கத்தினரின் தொழிற்சங்க இயக்கங்கள், வேலை நிறுத்தப்போராட்டங்கள், தேர்தல் அரசியல்கள், கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு போராட்டங்கள் போன்றவை இன்றைய அதிகார அடுக்கின் வக்கிரம் நிறைந்த வன்முறைகளுடன் கூடிய அணுகுமுறைகளையே பதிலிறுப்பாகத் தந்துள்ளன. இவை மக்களிடையே எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட கைங்கரியங்களில் இருந்து, மாறுபட்ட விதத்தில் தேர்தல் களங்களுக்கு வெளியிலும் தொழிற்சங்க வரையறைகளுக்கு வெளியிலும், பல போராட்டங்கள் பாரம்பரிய பிரசார ரீதியான விதத்திலன்றி முன்னெடுக்கப்பட வேண்டும்.

1971, 1988 ஜே.வி.பியின் ஆயுத நடவடிக்கைகளும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக நடைபெற்ற ஆயுதப் போராட்டமும், இனிமேல் ஒரு போதும் அவ்வாறான போராட்டங்கள் உருவாகக் கூடாது என்ற விரக்தி நிலையை மக்களிடம் தோற்றுவித்துள்ளன. இதில் அதிகார அடுக்கின் சக்திகள் வெற்றி பெற்றுள்ளதை மறுக்க முடியாது.

ஆனால், சரியான போராட்டத்தால், தற்போதைய ஆட்சிமுறையும் ஆளும் வர்க்கங்களும் செயலிழக்கச் செய்யப்பட்டு, இலங்கையில் அர்த்தமுள்ள ஜனநாயக ஆட்சிமுறை ஒன்றை ஏற்படுத்துவதைத் தவிர, வேறு தெரிவோ மாற்றுத்திட்டமோ ஒடுக்கப்பட்டுள்ள மக்களுக்கு இல்லை.

அதற்கு, தொடர்ச்சியான வெகுஜனப் போராட்டங்கள், புதிய விதத்தில் புதிய வகை மாதிரியில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு வரலாற்றில் கற்ற பாடங்களை மீட்டுப்பார்ப்பதும் அவசியமானது.

தலைமைத்துவங்களின் தவறுகளால், 1953 ஒகஸ்ட் 12இல் மக்கள் பெருமளவில் பங்கெடுத்த ஹர்த்தால் போராட்டம், வெகுஜன எழுச்சியாக வளரமுடியாமல் போனது பற்றிய பட்டறிவு எமக்கு இருக்கிறது. 1980 ஜூலை வேலை நிறுத்தப் போராட்டம் உட்பட, பல விதமான வேலைநிறுத்தப் போராட்டங்களும் மக்களின் எதிர்ப்பு இயக்கங்களும் ஆர்ப்பாட்டங்களும் எதிர்விளைவுகளைத் தந்த போலி இடதுசாரி சக்திகளினதும், தீயநோக்குடைய 'என்.ஜி.ஓ' அமைப்புகளினதும் நடவடிக்கைகளால் எதிரிடையாக அதிகார அடுக்கின் இருப்புக்கு அவை உதவி புரிந்துள்ளன.

அதேவேளை, வெகுஜன இயக்கங்களாலும் எதிர்ப்பு போராட்டங்களாலும் சில உரிமைகள் மக்களுக்கு கிடைத்துள்ளன என்பதையும் குறிப்பிடத்தக்களவான சில அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனால், அவற்றின் தலைமைத்துவங்கள் மக்கள் விரோத சக்திகளின் ஏகபோகத்துக்குள் மட்டுப்பட்டே இருந்தன. பொதுவாக, ஐக்கிய தேசிய கட்சியினதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினதும் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு, பொதுவாக இப்போராட்டங்கள் பயன்பட்டன. தமக்கு வாய்ப்பளிக்கும் வரை, அப்போராட்டங்கள் அவர்களால் பயன்படுத்தப்பட்டன.

இன்றைய சூழ்நிலையில், பொதுமக்கள் தமது அரசியல் எதிரியான அதிகார அடுக்குக்கு, நேருக்கு நேரெதிராக நிற்கும் அரசியல் சூழ்நிலையே நிலவுகிறது.

அந்த எதிர்ப்பு, அடிப்படையான சமூகமாற்றத்துக்குக் குறையாத மாற்றத்தை வேண்டி, அதற்கான தீவிரமான அரசியல் தலைமைத்துவ மாற்றத்தின் கீழ், வெகுவிரைவில் புதிய மக்கள் எழுச்சியை வேண்டிநிற்கிறது.

இந்த நிலைமை முதிர்ச்சியடைந்து, வெற்றிகரமான சூழ்நிலை ஏற்படுவது அனைத்து இலங்கை மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. மக்களால் வேண்டப்படாத, அவர்களின் பங்களிப்பில்லாத மாற்றம் சாத்தியமானதல்ல.

வெகுஜன எழுச்சியை, போராட்ட மார்க்கமாக ஏற்றுக்கொள்ளும் நாம், சமூகமாற்றத்துக்கான மக்கள் எழுச்சியின் புதிய அர்த்தத்தை, புதிய வடிவத்தை, புதிய இயங்கு முறையைப் பற்றி எமது கவனத்தை செலுத்த வேண்டியவர்களாகின்றோம்.

மக்கள் எழுச்சியை முறியடிக்க முடியாதளவுக்கு மாற்று பொருளாதார தற்காப்பு, வினை-எதிர்வினை, போராட்டத்தின் நியாயத்தை வலியுறுத்தும் பண்பாட்டு முறைமை போன்றனவற்றை தயாரிப்பது அவசியம். ஆகக்கூடுதலான மக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கும் வெகுஜன எழுச்சி, மக்களின் நலன்களுக்கான அம்சங்களைக் கொண்டதானதாக அமைய முடியும். வெகுஜன எழுச்சிகளை எவரும் வலுக்கட்டாயமாக ஏற்படுத்த முடியாது. ஒரு வெறும் அறிவிப்பின் மூலம் அல்லது துண்டுப்பிரசுர சுவரொட்டி அறைகூவல்களின் மூலம் வெகுஜனப் போராட்டங்களை வெகுஜன எழுச்சியாக ஏற்படுத்த முடியாது.

தேவையான அடிப்படையான நிலைமைகள் ஏற்படும் போது, முரண்பாடுகள் கூர்மையடையும் போது வெகுஜன எழுச்சி மேலெழும்புவது தவிர்க்க இயலாதது. சமூகமாற்றத்துக்கான வெகுஜன எழுச்சியை, எவரும் வலுக்காட்டாயமாக ஏற்படுத்த முடியாது.

அவ்வாறான, தயாரான சூழ்நிலை இல்லாத போது, மக்களின் எதிரிகள் வெகுஜனப் போராட்டங்களை அவர்களுக்கு சார்பாக பயன்படுத்திக் கொண்டு, அவற்றை செயலிழக்கச் செய்து, அவற்றின் இலக்கான சமூக மாற்றத்துக்குத் தடையாக இருப்பார்கள்.

இலங்கை வரலாற்றில், அதிகமான வெகுஜனப் போராட்டங்கள் இரண்டு பெரிய கட்சிகளான ஐ.தே. கவையும் சுதந்திரக் கட்சியையும் மாறி மாறி ஆட்சிக்குக் கொண்டுவரவே பயன்படுத்தப்பட்டுள்ளன. 'என்.ஜி.ஓ'க்கள், அவற்றின் நிகழ்ச்சி நிரலுக்கு, வெகுஜனப் போராட்டங்களை பயன்படுத்தியுள்ளன. அவை அதிகாரவர்க்கத்துக்கு உதவுவதாகவே முடிந்துள்ளன. இனியும் அவ்வாறே நிகழுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது மக்களே!

## கடிதங்கள்

### வீரமுனை வீதியின் அவலம் களையப்படுமா?

சம்மாந்துறை, பூமரத்தடி சந்தியில் இருந்து வீரமுனை ஊடாகச் செல்லும் பிரதான வீதி, கடந்த சில வருடங்களாக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் இவ்வீதி அமைந்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக, இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகின்ற பொழுதிலும், இன்னும் அரைகுறையாவே இந்த வீதி காட்சி அளிக்கின்றது. இதனால் போக்குவரத்து செய்ய முடியாத துரதிர்ஷ்டவசமான நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, வீரமுனை பிரதான வீதியில் இருக்கின்ற வடிகால், ஒரு சில மீற்றர் தூரம் போடப்பட்டு, ஏனையவை கைவிடப்படுள்ளன. இடையிலேயே கற்கள் குவிக்கப்பட்டு இருக்கிறது. கற்கள் வெளியே கிளம்பி, கால்களையும் வாகனங்களின் டயர்களையும் பதம் பார்த்த வண்ணமுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்ட இரண்டு கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதி, மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, கற்கள் மேலெழும்பிய வண்ணம் இருக்கின்றன. இதனால் போக்குவரத்து பூரணமாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணிக்க முடியாத சூழல் நிலவுகின்றது. இவ்வீதியால் பயணிக்கின்ற சைக்கிள்கள் பெரும்பாலும் 'பஞ்சர்' ஆகி விடுகின்றன. இந்த வீதியில், வீரமுனையின் பிரதான கோவில், பாடசாலை போன்றன அமைந்துள்ளன.

எனவே, வீதி விரைவாகப் புனரமைக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

வி. ரி சகாதேவராஜா

## SLT–MOBITEL இன் 4G Router

# வீட்டு விநியோக சேவை அறிமுகம்

SLT-MOBITEL, தனது 4G Router வீட்டு விநியோக சேவையை அறிமுகம் செய்துள்ளது. 4G router களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் இருப்பிடங்களுக்கு இலவசமாக விநியோகிக்கும் வசதியை ஏற்படுத்தியுள்ளது. இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு விற்பனையகமொன்றுக்கு நேரடியாக விஜயம் செய்யாமல், தமது வீடுகளில் சௌகரியமாக இருந்த வண்ணம் வாடிக்கையாளர்களுக்கு சாதனங்களை கொள்வனவு செய்யும் வசதியை SLT-MOBITEL அறிமுகம் செய்துள்ளது.

SLT-MOBITEL இன் பரந்த வாடிக்கையாளர் மையப்படுத்திய சேவை மேம்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு உரிய காலப்பகுதியில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது போன்ற பரந்த கொள்கையின் அங்கமாகவும், தேசிய ரீதியில் நிலவும் தினசரி பயணங்களை முன்னெடுப்பதில் காணப்படும் சவால்கள் நிறைந்த சூழ்நிலையை சீராக்கிக் கொள்வதற்கும் இந்த 4G Router வீட்டு விநியோக சேவை அமைந்துள்ளது.




SLT-MOBITEL 4G router விநியோக சேவையினூடாக, mAgent மூலம் தமது இருப்பிடத்தில் இந்தத் தயாரிப்பைப் பெற்றுக் கொள்வது உறுதி செய்யப்படுகின்றது. வாடிக்கையாளர்கள் 1717 உடன் தொடர்பு கொண்டு அல்லது நிறுவனத்தின் இணையத்தளத்தில் பிரவேசித்து தமது விவரங்களை பதிந்து ஓடரை மேற்கொள்ளலாம்.

SLT-MOBITEL இனால் Home 4G Router உடன் இணைப்பு வாடிக்கையாளர் இருப்பிடத்துக்கு வழங்கப்படும். விநியோகக் கட்டணம் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.

SLT-MOBITEL இனால் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான முறையில் தமது தேவையான தளங்களை அணுகும் வாய்ப்பு புத்தாக்கமான வழிமுறைகளில் வழங்கப்படுகின்றன. மேலும், வீட்டு வாசலுக்கான விநியோகத்தில் உள்ளடக்கப்பட்ட மேலதிக சேவையாக, வாடிக்கையாளர்களுக்கு தற்போது புதிய மொபைல் இணைப்புகள் மற்றும் SIM மாற்றீடுகள் போன்றவற்றையும் பெற்றுக் கொள்ள முடியும்.

## யூனியன் அஷ்யூரன்ஸ் blog ஆக்கங்களுக்கான

# போட்டி முன்னெடுப்பு

யூனியன் அஷ்யூரன்ஸ், துறையின் முதலாவது blog ஆக்கங்களை பதிவு செய்யும் போட்டியான 'BLOG IT' என்பதை 2022 செப்டெம்பர் முதலாம் திகதி முதல் அறிமுகம் செய்துள்ளது. செப்டெம்பர் மாதம் ஆயுள் காப்புறுதி விழிப்புணர்வு மாதமாக அனுஷ்டிக்கப்படும் நிலையில் இந்தப் போட்டியை யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னெடுக்கின்றது. இந்த BLOG IT போட்டியில் ஆர்வமுள்ள அனைவரும் தமது ஆக்கங்களை https://lnkd.in/gxFCcH2R எனும் இணையத்தளத்தினூடாக 2022 செப்டெம்பர் 25ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். இந்தப் போட்டியில் வெற்றியாளராக தெரிவு செய்யப்படுவோருக்கு ரூ. 180,000 பெறுமதியான பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படும் என்பதுடன், தமது ஆக்கங்களை யூனியன் அஷ்யூரன்ஸ் இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்களில் பிரசுரமாவதற்கான வாய்ப்பையும் பெறுவார்கள்.

மக்களுக்கு தமது கனவுகளை எய்துவதற்கு வலுவூட்டுவதற்கும், ஆரோக்கிய நலனுக்காக காப்புறுதிகளை வழங்குவதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்த நோக்கத்தின் நீடிப்பாக BLOG IT அமைந்துள்ளது. கட்டுரை, கவிதை, சிறுகதை போன்றவற்றினூடாக, 'ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம்' என்பதை இலங்கையின் திறமையாளர்கள் வெளிப்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் போட்டி அமைந்துள்ளது. சுயாதீன நிபுணர்களால் மீளாய்வு செய்யப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கங்களின் தரம் மற்றும் புத்தாக்கத்திறன் போன்றவற்றினூடாக வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேன் குணரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "பொது மக்கள், நிதிப் பாதுகாப்பைப் பெற்றிருப்பதன் முக்கியத்துவம் மற்றும் பரிபூரணமான வாழ்க்கையை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஆயுள் காப்புறுதி விழிப்புணர்வு மாதம் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த ஆண்டில், BLOG IT எனும் போட்டியை அறிமுகம் செய்வதையிட்டு யூனியன் அஷ்யூரன்ஸ் பெருமை கொள்கின்றது. எமது திறமையான எழுத்தாளர்கள், தமது சிந்தனைகளை வெளிப்படுத்தி, பகிர்ந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தொழிற்துறையில் இது போன்று முன்னெடுக்கப்படும் முதலாவது போட்டியாகவும் BLOG IT அமைந்துள்ளது. எழுத்துத் துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பை வழங்குவதில் நாம் தலைமைத்துவமேற்று செயலாற்றுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அனைத்து பங்குபற்றுநர்களுக்கும் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், பங்குபற்றுகின்றமைக்காக நன்றி தெரிவிக்கின்றேன்" என்றார்.

இலங்கை, தற்போது எதிர்கொண்டுள்ள




பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டெழும் வகையில் பணியாற்றுவதுடன், தனிநபர்கள் மற்றும் குடும்பங்களை நிதித் தளம்பல் நிலைகளிலிருந்து பாதுகாக்கும் வகையில், சமூகங்கள் மத்தியில் நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. ஆயுள் காப்புறுதி விழிப்புணர்வு மாதத்தில் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக BLOG IT மற்றும் பல இதர செயற்பாடுகளை முன்னெடுக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.





## நவராத்திரி விரதத்தின் மகிமையும் சிறப்பும்

# மூதூர் கிழக்கில் தமிழர் பண்பாட்டு கும்பவிழா



அ . அச்சுதன்



மனிதன் மனிதனாக வாழ்வதற்குத் தேவைப்படுவது வீரமும் செல்வமும் கல்வியும் என்ற மூன்று பேறுகளுமாகும்.

இவற்றின் முக்கியத்துவம் கருதியும் இந்த மூன்று பேறுகளையும் கௌரவிக்கும் முகமாகவும் துர்க்கா, இலக்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியரையும் முதன்மைப்படுத்தி சைவ சமயத்தவர்கள் வழிபட்டு வருகின்றனர். இதைச் சக்தி வழிபாடு என்றும் நவராத்திரி விரதம் என்றும் புராணங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த மகத்துவமான நவராத்திரி கும்ப விரதத்தை, ஒவ்வோர் ஆண்டும் பஞ்சாங்கம் பதிவிட்டபடி அனுஷ்டித்து வருவது குறிப்பிடத்தக்கது. புரட்டாதி முதல் கார்த்திகை வரை இவ்விரத காலம் நடைபெறுவதுண்டு. நிகழும் சுபகிருது வருடம் புரட்டாதித் திங்கள் ஒன்பதாம் நாள் (26.09.2022 திங்கட்கிழமை) வளர்பிறை பிரதமைத் திதியில் தொடங்கும் 'நவராத்திரி விரதம்' கும்பஸ்தாபனத்துடன் ஆரம்பமாக உள்ளதாக, வாக்கியம், திருக்கணித பஞ்சாங்கங்கள் குறித்துள்ளன.

இதன்படி, நாடெங்கிலுமுள்ள கோவில்களில், நவராத்திரிக் கும்ப விரத கும்பஸ்தாபனம் முறைப்படி செய்யப்பட்டு, பூசை வழிபாடுகள் இடம்பெற்று 10ஆம் நாள் விஜயதசமியில் மகிசூர வதம் நடைபெற்று, கும்பவிழா ஊர்வலத்துடன் கும்பம் சொரிதலுடன் நிறைவுபெறும். இது பொதுவாக நடைமுறையில் காணக்கூடியதான வழமையாகும்.

ஆகமம் சாராத வகையில், விசேடமாக திருகோணமலை மாவட்டத்தில் , மூதூர் கிழக்குப் பகுதிகளில் நவராத்திரி கும்ப வழிபாட்டு முறைகள், முற்று முழுதாக பாரம்பரிய கிராமிய முறையிலான மந்திர மயமாக்கலுடன் நடைபெற்று வருவது, சக்தி வழிபாட்டில் நவராத்திரி கும்ப விரத விழாவின் விசேட சிறப்பம்சமாகும்.

பெரும்பான்மையாக, மாந்திரீக செயற்பாடுகளில் இப்பகுதி மக்கள் பெரும் ஆர்வமுடையவர்கள் என்பதை நவராத்திரிக்கும்ப விழாவுக்கு வருபவர்கள் நேரில் காணமுடியும். அதுமட்டுமின்றி, சக்திவழிபாட்டில் பக்தியுடையவர்கள் என்பதையும் பறைமேளம் அடித்தல், உடுக்கடித்தல், சல்லாரி கைத்தாளம் பண்ணோடு அகவல், அம்மன் காவியம் பதிகம், கும்மி, அம்மனை பாடுபவர்களையும் இப்பகுதி கும்பக் கோவில்களில் பரவலாகப் பார்க்கலாம்.

குழுக்களாக சேர்ந்து பாடும்போது, ஆட்டங்களும் இடம்பெறும். சேனையூர், மருதநகர், சாலையூர், சம்புக்கழி, கடற்கரைச்சேனை, சந்தோசபுரம், கட்டைபறிச்சான், கல்லாம்பார், கணேசபுரம், அம்மன்நகர் ஆகிய இடங்களில் நவராத்திரி கும்பவிழா களைகட்டும் காட்சிகள், பார்ப்பதற்கு பரவசத்தையும் பயங்கலந்த பக்தியையும் ஏற்படுத்தும்.

இதனால், நவராத்திரி காலத்தில் மூதூர் கிழக்கு விழாக் கோலந்தான்! ஒவ்வொரு கும்பக் கோவில்களிலும் தலைப்பூசாரி, இணைப்பூசாரி, உதவிப்பூசகர்கள், தொண்டர்கள் எனப்பலர் இருப்பார்கள்.

'சன்னதம்' ஆடுபவர்களை மந்திரசக்தியால் விழுத்துவது, கட்டுவது, வழிமறிப்பது என்பனவும் இடம்பெறும். இதனை ஒரு சாரார் செய்ய, பூசாரிமார் தடைகளை உடைப்பதும் உருவேற்றி சன்னதம் ஆட வைப்பதும், விழுந்து கிடப்பவர்களை எழுப்புவதும் சன்னதம் ஆடுபவர்கள் உருவேறி சாட்டை அடிப்பதும் சாட்டை சுழட்டுவதும் மாந்திரீக மூலமேயாகும். இந்தக் காட்சிகள், பயங்கரமானதாக ஒருவித கிலியை ஏற்படுத்தும் என்றால் பொய்யில்லை; உண்மையே! கண்ணால் கண்டு, பக்திப் பரவசத்தில் திளைத்தாலே இதன் தாற்பரியங்களை உணர்ந்துகொள்ள முடியும்.

கும்பத்தின் அடிப்படை வேர்கள், பல நூற்றாண்டுகள் பழைமையின் சாயலில் தொடர்கின்றன. அழகியலும் சடங்குகளுமாய் நீளும் ஒரு பாரம்பரியமான தமிழர் விழா இது எனலாம். சமயம் என்பதற்கு அப்பாலும், இதனை நாம் தமிழர் கலை, காலாசார, பண்பாட்டு அடையாளமாக இனங்காண முடியும்.

கும்பம் வருகுது கும்பம் வருகுது
கூடியே எல்லோரும் வாருங்கடி அருள்
மங்கள நாயகி சேனையூர் கும்பத்து
மாரியம்மன் கும்பம்பாருங்கடி

இப்பாடல்வரிகள், சேனையூர் கவிக்குயிலன் பாடியவை. இதுபோல், இனிய கும்மிப்பாடல்களையும் நவராத்திரி கும்ப ஊர்வல விழாவில் கேட்கலாம். மாந்திரீக சக்தி மகிமை, உருவேறி சன்னம் ஆடுபவர்களின் அற்புதக் காட்சிகளும் ஊரின் சிறப்புகளும் மூதூர் கிழக்கில் காணலாம்.

## 'ஓம் ஸ்ரீ லலிதா தேவியே நமஹ'

# திங்கட்கிழமை நவராத்திரி ஆரம்பம்

சிவனைவழிபட ஓர் இராத்திரி சிவராத்திரி; அம்பிகையை வழிபடுவதற்கான ஒன்பது இராத்திரிகள் நவராத்திரி.

ஆண்டு முழுவதும் அம்பாளை வழிபடுவதை விட, இந்த ஒன்பது நாள்களிலும் வழிபாடு செய்தாலே, வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுவிட முடியும். நவராத்திரி வழிபாட்டின் மூலமாக கிடைக்கும் நன்மைகள் பற்றிய சில தகவல்கள் இங்கே...



நவராத்திரி நாள்களில், இரவு ஏழு மணி முதல் 9.30 மணி வரை தேவி வழிபாடு செய்ய உகந்த நேரமாகும். நவராத்திரி நாள்களில் பெண்கள் அனைவரும் 'கன்யா பூஜை' செய்வதால் சகல செல்வங்களையும் பெறலாம்.

நவராத்திரி பூஜையின் ஒன்பது நாள்களும் ஈசனும் அம்மையும் ஒன்று சேர்ந்து ஊஞ்சலில் ஆடுகின்ற தரிசனத்தை காண்பவர்களுக்கு, நவராத்திரி பூஜை செய்ததற்கான பலன் முழுமையாகக் கிடைக்கும்.

அம்பாள் ஒரு சங்கீதப் பிரியை. எனவே, நவராத்திரியின் அனைத்து நாள்களிலும் அம்பாளை சிறப்பிக்கும் வகையிலான அம்பாளின் பாடல்களில் ஒன்றையாவது பாட வேண்டும்.

நவராத்திரி நாள்களில், பகல் வேலையில் சிவபெருமானையும் இரவு நேரத்தில் அம்பிகையையும் பூஜை செய்வதே சரியான வழிபாடாகும். நவராத்திரி காலத்தில் ஒன்பது நாள்களும் தினமும் பகலில் ஆயிரத்தெட்டு சிவ நாமாவளிகளை ஜெபித்து வழிபட்டால், அளவில்லாத பலன்களைப் பெறலாம் என்கிறது ஆகமங்கள்.

இன்றைய காலகட்டத்தில் வீட்டில் கோலமிடும் பலரும், சுண்ணாம்பு மாவைதான் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நவராத்திரியின் ஒன்பது தினங்களில் மட்டுமாவது அரிசி மாவை பயன்படுத்தி கோலமிட வேண்டும். இதனால் பல நற்பலன்கள் கிடைக்கும்.

இக்காலத்தில் முடிந்தவரை, தேவியின் நாமத்தை பாராயணம் செய்வது தேவிக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தரும். 'ஓம் ஸ்ரீ லலிதா தேவியே நமஹ' என்று 108 முறை சொன்னாலே போதும். சிறப்பான பலன்கள் வந்து மகிழ்ச்சியைத் தரும்.

நவராத்திரியில் வரும் திங்கட்கிழமை, லலிதாம்பிகையின் அவதார தினமாக கொண்டாடப்படுகிறது. அன்று, ஒன்பது சிறுமிகளுக்கு பட்டுப்பாவாடை தானம் செய்தால், நினைத்தது நடக்கும்.

நவராத்திரி ஒன்பது நாள்களும் சர்க்கரைப் பொங்கல், உளுந்து வடை நைவேத்தியம் செய்தால் கூடுதல் நற்பலன்கள் கிடைக்கும்.

விஜயதசமி தினத்தன்று, வன்னி மரக்கிளை அல்லது வாளை மரத்தை எழுந்தருளச் செய்து, பூஜை நடத்துவார்கள். இந்த வழிபாட்டில் கலந்து கொண்டால், கிரக தோஷங்கள் விலகி ஓடி விடும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது.



மியான்மார்

# பாடசாலை மீது வான்வழித் தாக்குதல்

### 11 சிறுவர்கள் உயிரிழப்பு

இராணுவ ஆட்சி இடம்பெற்று வரும் மியான்மாரில் பாடசாலைக் கட்டடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட வான்வழித்தாக்குதலில் சிக்கி 11 சிறுவர்கள் உயிரிழந்துள்ளார்கள்.

மியான்மாரின் வடமேற்கு பகுதியில் சகாயிங் பிராந்தியத்தில் உள்ள பாடசாலைக் கட்டடம் ஒன்றின் மீது அண்மையில் மியான்மார் இராணுவம் வான்வழித் தாக்குதலை நடத்தியது.

இத்தாக்குதலில் 11 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் 15 சிறுவர்கள் மாயமாகி உள்ளனர் எனவும் சிறுவர்களுக்கான ஐ.நாவின் யுனிசெப் அமைப்பு தெரிவித்திருந்தது.

எனினும் இதனை மறுத்துள்ள மியான்மார் இராணுவம், குறித்த பாடசாலைக் கட்டடத்தில் கிளர்ச்சியாளர்கள் பதுங்கி இருந்தனர் எனவும் அவர்களைக் குறிவைத்தே தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் விளக்கம் அளித்துள்ளது.



அமெரிக்கா

# மீண்டும் சிக்கிய ட்ரம்ப்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தன்னை 27 ஆண்டுகளுக்கு முன்னர் பாலியல் பலாத்காரம் செய்தார் எனப் பிரபல பெண் எழுத்தாளர் ஜீன் கரோல் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், “1995ஆம் ஆண்டின் பிற்பகுதி அல்லது 1996ஆம் ஆண்டின் முற்பகுதியில் மிட்டவுன் மன்ஹாட்டன் பகுதியில் உள்ள ஒரு கடையின் உடைமாற்றும் அறையில் என்னை ட்ரம்ப் பாலியல் பலாத்காரம் செய்தார்” எனத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, கரோலின் வழக்கறிஞர் ரோபர்ட்டா கப்லன் கூறுகையில், “ட்ரம்ப் மீது வருகிற நவம்பர் மாதம் 24ஆம் திகதி இது குறித்து வழக்குத் தொடரத் திட்டமிட்டு உள்ளோம். இவ்வழக்கானது அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் விசாரிக்கப்படலாம்” என்றார்.

இந்நிலையில் எழுத்தாளரின் குற்றச்சாட்டை மறுத்துள்ள டொனால்ட் ட்ரம்ப், “கரோல் தனது புத்தகத்தை விற்பதற்காக என்மீது பாலியல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்” எனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே ட்ரம்ப் மீது பிரபல மொடல் அழகி ஒருவர் பாலியல் பலாத்கார குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

# ஒரே நேரத்தில் கரை ஒதுங்கிய 200க்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள்

அவுஸ்திரேலியாவின் மேற்கு கடற்கரை பகுதியான டாஸ்மேனியாவில், 200க்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் ஒரே நேரத்தில் கரை ஒதுங்கியது சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

230 பைலட் திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியுள்ளன எனவும், இவற்றில் பாதி உயிருடன் இருக்கலாம் எனவும் மீட்புப்படையினர் கணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கரை ஒதுங்கியுள்ள திமிங்கிலங்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியதற்கான காரணம், அதிகாரப்பூர்வமாக இன்னும் வெளியாகவில்லை.

இப்பகுதியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் இதேபோன்று திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் சுமார் 6 மீற்றர் வரையில் வளரக்கூடிய இந்த வகை திமிங்கிலங்கள் கணிசமான எண்ணிக்கையில் கரை ஒதுங்கும் நிகழ்வு குறிப்பிட்ட கால இடைவெளியில் மீண்டும் நடந்திருப்பதால் அப்பகுதி மக்களை சோகத்தில் மூழ்கடித்துள்ளது.



ஈரான்


### ஹிஜாப் விவகாரம்

# ஈரானில் அதிகரிக்கும் பதற்றம்

ஈரானில் அண்மையில் ஹிஜாப்பை முறையாக அணியவில்லை எனக் கூறி கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம்பெண் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்ததோடு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்காக பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஐந்து நாள்களுக்கு மேலாகத் தொடர்ந்து நடைபெறும் இப்போராட்டத்தில் பெண்கள் பலர் தங்களின் ஹிஜாபைக் கழற்றி எறிந்தும் அதைத் தீயிட்டு எரித்தும், தலைமுடியை வெட்டியும் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.





### இன்று இரண்டாவது போட்டி: அவுஸ்திரேலியாவுக்கெதிரான

# தொடரைத் தக்க வைக்குமா இந்தியா?

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியானது நாக்பூரில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதலாவது போட்டியில் ஏற்கெனவே தோல்வியுற்றுள்ள இந்தியா, தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியை கட்டாயம் வென்றே ஆக வேண்டிய நிலையில் உள்ளது.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் ஓட்டங்களைக் கட்டுப்படுத்துவது பிரச்சினையாகவுள்ள நிலையில், கடந்த போட்டியில் விளையாடிய உமேஷ் யாதவ்வை ஜஸ்பிரிட் பும்ரா பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக முதலாவது போட்டியில் விளையாடிய அதேயணியே இப்போட்டியிலும் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



### பங்களாதேஷின் அணித்தலைவராக

# ஷகிப்பை பிரதியிட்ட நுருல் ஹஸன்

ஐக்கிய அரபு அமீரகத்துக்கெதிரான இருபதுக்கு 20 தொடரில் பங்களாதேஷின் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன் இடம்பெறவில்லை.

அல்-ஹஸனின் கரீபியன் பிறீமியர் லீக் ஒப்பந்தத்திலிருந்து அவரை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அழைக்கவில்லை.

இந்நிலையில், அல்-ஹஸனுக்குப் பதிலாக நுருல் ஹஸன் தலைமை தாங்கவுள்ளார். இக்குழாமில் செளமியா சர்க்கார், ஷொரிஃபுல் இஸ்லாம் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: நுருல் ஹஸன் (அணித்தலைவர்), சபீர் ரஹ்மான், மெஹிடி ஹஸன் மிராஸ், அஃபிஃப் ஹொஸைன், மொஷாடெக் ஹொஸைன், லிட்டன் தாஸ், யசீர் அலி, முஸ்தபிசூர் ரஹ்மான், மொஹமட் சைபுடீன், தஸ்கின் அஹ்மட், எபொடொட் ஹொஸைன், ஹஸன் மஹ்மூட், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, நசும் அஹ்மட், ஷொரிஃபுல் இஸ்லாம், செளமியா சர்க்கார், றிஷாட் ஹொஸைன்.

# மூடியின் ஒப்பந்தத்தை இரத்துச் செய்த இலங்கை கிரிக்கெட் சபை



இலங்கை கிரிக்கெட் சபையின் பணிப்பாளராக டொம் மூடியின் மூன்றாண்டு ஒப்பந்தத்தை 19 மாதங்களில் சபை இரத்துச் செய்துள்ளது. இந்நிலையில் இணக்கப்பாட்டுடனேயே இது இடம்பெற்றதாகவும் எதிர்காலத்தில் ஆலோசனையாளராக மூடியை மீண்டும் கொண்டு வருவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தயாராகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சம்மாந்துறை வலயத்திலிருந்து

# தேசிய மட்டத்துக்கு ஐந்து நிகழ்ச்சிகள்

வி.ரி. சகாதேவராஜா

கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்று முடிந்த பெரு விளையாட்டுகளில், சம்மாந்துறை வலயம் ஐந்து பெரு விளையாட்டுகளில் தேசிய மட்டத்துக்கு தெரிவாகி உள்ளதாக சம்மாந்துறை வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. முஸ்ரக்அலி தெரிவித்தார்.




நாவிதன்வெளி கோட்டத்தில் உள்ள றாணமடு, இந்துக் கல்லூரி கபடி, எல்லே விளையாட்டுகளில் சம்பியனானதுடன், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் கால்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் ஆகியவற்றில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. இறக்காமம் அல் அஷ்ரப் மத்திய கல்லூரி கரப்பந்தாட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றது.

# பார்சிலோனாவிலிருந்து வெளியேறும் புஷ்கட்ஸ்?

ஐக்கிய அமெரிக்காவின் மேஜர் லீக் சொக்கரின் இன்டர் மியாமி அணிக்கு ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா அணியின் தலைவர் சேர்ஜியோ புஷ்கட்ஸ் செல்லவுள்ளதாகக் கூறப்படுகிறது.

மத்தியகளவீரரான புஷ்கட்ஸின் பார்சிலோனாவுடனான ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்தில் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

34 வயதான புஷ்கட்ஸ், பார்சிலோனாவுக்காக 455 லீக் போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 23 செப்டெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.